மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්



WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



குரல் - 109 | 10.10.2023 (செவ்வாய்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 08 | ஊக்குவிப்பு : ரூ 30.00


# வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால்!

## 20 ஆம் திகதி அழைக்கும் தமிழ் கட்சிகள்



வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்புவிடுத்துள்ளன.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான நீதிவிசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக்குள்ளாகுவதை சுட்டிக்காட்டியும்- கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போதே எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்புவிடுத்துள்ளன. பக்கம் 05

# இந்தியா - இலங்கை கப்பல் சேவை இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது!

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று ஆரம்பமாகவிருந்த நிலையில், இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டுள்ளது.

தொழிநுட்ப தடங்கள் காரணமாக, எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் இந்த சேவை பிற்போடப்பட்டுள்ளது. தமிழகத்தின் நாகப்பட்டினத்திற்கும், இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையில் செரியாபாணி என்ற பெயரைக் கொண்ட பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக் கப்படவுள்ளது. செரியாபாணி கப்பலின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

எனினும், தொழிநுட்ப ரீதியான தடங்கல்கள் காரணமாக சேவைகள் நிறுத்தப்படுகிறது என நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

# இஸ்ரேல் போரில் இலங்கை பெண் பலி

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான உக்கிர மோதலில் இலங்கை பெண் உயிரிழந்துள்ளார்.

காணாமல் போன நிலையில் தேடப்பட்டு வந்த குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலில் பணியாற்றிய அனுலா ஜயதிலக்க என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இஸ்ரேலில் வயதான பார்வையற்ற பெண்ணை அனுலா பக்கம் 05

# இறக்குமதி கட்டுப்பாடுகள் நேற்று முதல் நீக்கப்பட்டன

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதி பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக கட்டுப்பாட்டுகள் நீக்கப்படுகின்றன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன.

இது தொடர்பிலான வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

# சீரற்ற வானிலை காரணமாக 75 ஆயிரத்து 734 பேர் பாதிப்பு

நாடு முழுவதும் நிலவிவரும் சீரற்ற வானிநிலை காரணமாக 13 மாவட்டங்களில் 20 ஆயிரத்து 480 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 734 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தினால் 33 ஆயிரத்து 488 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மோசமான வானிலை காரணமாக 13 வீடுகள் முழுமையாகவும் 1,125 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட 555 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் பல பகுதிகளில் விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கையை மூன்றாம் கட்டத்துக்கு உயர்த்தியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இதன்படி காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, இமதுவ, நாகொட, யக்கலமுல்ல, களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, வலலவிட்ட, மத்துகம, மாத்தறை மாவட்டத்தில் பிடபெத்தர, அக்குரஸ்ஸ, ஹக்மன ஆகிய நான்கு பகுதிகளும், மக்கள் வெளியேற்றப்பட வேண்டிய பகுதிகளா அறிவிக்கப்பட்டுள்ளன.



## நில்வளா கங்கை தொடர்பில் அவதானம்: அமைச்சர் ஜீவன் தலைமையில் கூட்டம்





மாத்தறை நில்வளா கங்கையில் தடுப்பணையில் உள்ள ஒரு பகுதியை மாற்றுவதற்கும், கிளை ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியிலான தீர்வை காண்பதற்கான விசேட கூட்டம் ஒன்று நேற்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் மாத்தறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில், நில்வளா கங்கையில் அமையப்பெற்றுள்ள தடுப்பணையால் தான் இந்த நிலைமை என மக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வறட்சி காலத்தில் கடல் நீர் ஆற்றுடன் வந்து கலக்காமல் இருப்பதற்காகவும், சுத்தமான குடிநீர் பெறும் நோக்கிலும் தான் இந்த தடுப்பணை அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

## பிரதான ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிப்பு


கிங் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், பத்தேகமை பகுதியில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நில்வளா கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தல்கஹாகொடை மற்றும் பனதுகம ஆகிய பகுதிகளில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையை அடுத்து கலவெல்லாவ பகுதியிலும் வெள்ளநீர் புகுந்துள்ளது என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், களனி கங்கை, மகாவலி கங்கை உள்ளிட்ட ஆறுகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## திருகோணமலையில் தொகைமதிப்பு



2024 ஆம் ஆண்டுக்கான குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு செயற்பாடு திருகோணமலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உத்தியோகபூர்வ கணக்கீட்டு வரைபடம் மாவட்ட அரசாங்க அதிபரினால் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



கொழும்பின் 04 இடங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்து வருகிறது என கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

நாரஹேன்பிட்ட, கிருலப்பனை, முகத்துவாரம் மற்றும் மட்டக்குளி ஆகிய பகுதிகளில் இவ்வாறு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

3 வாரங்களுக்கு முன்னதாக இந்த பகுதிகளில் நாளாந்தம் 2 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த எண்ணிக்கை 5 அல்லது 6 வரை அதிகரித்துள்ளது என பிரதான சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி கூறியுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த இரகசிய அறிக்கைகளை கோருகின்றது கத்தோலிக்க ஆயர்கள் பேரவை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து வெளிநாடுகளின் இரகசிய சேவைகள் வழங்கிய அறிக்கைகளின் பிரதிகளை இலங்கையில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளது.

12 மறைமாவட்டங்களின் ஆயர் கள் மற்றும் கொழும்பில் உள்ள மூன்று துணை ஆயர்களால் கையொப்பமிடப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஜனாதிபதி தெரிவித்தமைக்கு அமைய, எப்.பி.ஐ., பிரித்தானிய பொலிஸார் மற்றும் இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் இரகசிய சேவைகளின் ஈஸ்டர் தாக்குதல் குறித்த அறிக்கைகளின் பிரதிகளையே ஆயர் பேரவை கோரியுள்ளது.

இதுபோன்ற அறிக்கைகள் இருப்பது முதல் முறையாக பொது மக்கள் மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று ஆயர்கள் குறிப்பிட்டனர்.

கர்தினால் ஒருங்கிணைந்த மற்றும் மிக முக்கியமான உறுப்பினர் என்பதால், கர்தினால் குறித்து ஜனாதிபதி ஒருமையில் குறிப்பிடுவது கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கூட்டுத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் ஆயர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தான் ஆயர்கள் பேரவையை கையாள்வதாகவும், கார்தினாலுடன் அல்ல என்றும் ஜனாதிபதி தனது நேர்காணலில் குறிப்பிட்டமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரியை மறைக்கிறது அரசாங்கம்



## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு தாக்குதல் ஒரு திட்டமிட்ட செயலென மலையக மக்கள் முன்னணி தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரேலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பில் இதுவரை பிரதான சூத்திரத்தாரி இனங்காணப்பட்டாலும் சூத்திரதாரி தொடர்பான தகவல்களை வெளிக்கொணர்வதற்கு அரசாங்கம் மறுக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மஸ்கெலியா லக்ஷபான பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணைகளை நடத்துமாறு கோருகின்ற போதும் நாட்டின் ஜனாதிபதி ரணில் விசக்ரமசிங்க விசாரணைக்கு அனுமதி வழங்குவதில்லை. தற்பொழுது எமது நாட்டை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி செய்கிறதா அல்லது ஸ்ரீ இலங்கை பொது ஜன பெரமுனை ஆட்சி செய்கிறதா என்பது தெரியவில்லை

நீதி துறையில் நீதியினை வழங்குகின்ற நீதிபதி முல்லைத்தீவு குருந்தூர் மலை தொடர்பான வழக்கு விடயத்தில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையால் நீதிபதி பதவியிலிருந்து பதவி விலகி வெளிநாட்டுக்கு சென்றுள்ள நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணியினை வழங்குவதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம்.

பிழையான திட்டங்களை அரசாங்கம் கொண்டு வருவதன காரணமாக அரசாங்கத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. விவசாயத்துறையில் உரத்தினை இடை நிறுத்தியமையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

உலகத்தில் முதல் ஜனநாயகவாதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டில் இன்று முறையான தேர்தல் ஒன்று இல்லை, ஜனநாயகம் இல்லை மக்களை அடக்குமுறைக்கு உள்வாங்க முயற்சிக்கிறார் என்றார்.

# சாந்தனின் மனுவை விசாரிப்பதில் இருந்து விலகினார் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரிப்பதில் இருந்து இந்தியாவின் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுந்தர் விலகியுள்ளார்.

தன்னை இலங்கைக்கு அனுப்புவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் தமிழக அரசிடம் மனுதாரர் தெரிவித்துள்ளதாக இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்குக்கான நீதிபதிகளாக எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய குழு பட்டிய லிடப்பட்ட நிலையில் மனுவை விசாரிப்பதில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் அறிவித் துள்ளார்.

இதற்கமைய வழக்கை நீதிபதி டி. கிருஷ்ண குமார் தலைமையிலான அமர்வு முன் பட்டியலிட பதிவுத்துறைக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித் துள்ளது.

இதன்படி மனுதாரர் தனது வழக்கறிஞர் பி. புகழேந்தி மூலம் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், தான் இலங்கைப் பிரஜை என்றும், நவம்பர் 12, 2022, உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க சிறையில் இருந்து விடுதலையான தான் 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும், தனது சொந்த நாட்டிற்கு நாடு கடத்தப்படும் வரை சிறப்பு முகாமின் எல்லையை விட்டு வெளியேறக்கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் நவம்பர் 11, 2022 அன்று உத்தரவு பிறப்பித்ததாக சாந்தன் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் வல்வெட்டியில் வசிக்கும் தனது 75 வயதுடைய தாயார் கடுமையான சுகவீனமுற்றிருப்பதால், தாம் உடனடியாக இலங்கை செல்ல விரும்புவதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப் பியுள்ள மனுக்களை குறிப்பிட்ட அவர், தனது பிரதிநிதித்துவங்கள் இன்னும் பரிசீலிக்கப் படவில்லை என மனுவில் கூறியுள்ளார்.



# சுயாதீன உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்ட ஆலோசனை!

## - ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிரடி அறிவிப்பு



அமைச்சர் நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை அடிப்படையாக கொண்டு பொதுஜன பெரமுன வின் கட்சி கொள்கைக்கு எதிராக செயற்பட்டு சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது எனவும் வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனறும் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்காமல் நாட்டு மக்களின் சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கியதால் பொருளாதார பாதிப்பு தீவிமடைந்தது.பொருளாதார பாதிப்பை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள்.

நாடு தற்போது சமூக மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதற்கு ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இடம்பெற்ற அரகலயவே பொறுப்புக் கூற வேண்டும்.போராட்டத்தின் காரணமாகவே நாடாளுமன்றத்தில் ஒன்றை ஆசனத்தில் இருந்தவர் ஜனாதிபதியாகினார்.

பூகோள பாதிப்புக்கு மத்தியில் யார் மக்களை பாதுகாத்தார்கள்,நெருக்கடியான சூழ்நிலையை யார் தமது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் முன்மாதிரியான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு முரணாக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரியுள்ளோம்.வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா குறிப்பிட்டுள்ளார். இது அவரது தனிப்பட்ட தீர்மானமே தவிர கட்சியின் தீர்மானமல்ல,ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பரந்துப்பட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.



# இஸ்ரேல் போரை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்

## - ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இஸ்ரேலில் இடம்பெற்ற தாக்குதல்கள், அங்கு வாழும் இலங்கையர்கள் மற்றும் இஸ்ரேலிய மக்கள் மீது ஏற்படுத்திய பாதிப்புகள் குறித்து உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருகிறோம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவைக்கு விசேட அறிவிப்பு ஒன்றை முன்வைத்த ஜனாதிபதி, இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் ஆராய்ந்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாகவும் ஊழியர்களாகவும் வருகை தந்துள்ள இஸ்ரேலியர்கள் தமது நாட்டுக்குத் திரும்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் இலங்கையில் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் பொலிஸ் திணைக்களத்திற்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் எனும் இரு நாட்டுக் கொள்கைக்கான இலங்கையின் நீண்டகால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி, பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினரால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், இவ்வாறான தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடி நிலை உலகளாவிய எரிபொருள் விலையில் ஏற்படுத்தக்கூடிய கடுமையான தாக்கத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.ஆபிரிக்க ஒன்றியத்தின் பரிந்துரையின் படி, இந்த மோதலை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இந்த மோதல்கள் காரணமாக எரிபொருளின் விலையில் நீண்டகால அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் இது இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

**இஸ்ரேல் போரில் ...**

பராமரித்து வந்துள்ளார்.

அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் பணியாற்றிய இடத்தின் உரிமையாளர்கள் பேஸ்புக்கில் பதிவொன்றை பதிவிட்டுள்ளனர்.

அனுலா எனது மறைந்த அத்தை அலிசாவின் பராமரிப்பாளராக இருந்தார். அர்ப்பணிப்பு மற்றும் அன்பான இதயத்துடன், வீட்டில் உள்ள பூனைகளையும், அநேகமாக பறவைகள் மற்றும் பிற உயிரினங்களையும் கவனித்துக்கொண்டார்.

என் அத்தையின் மறைவுக்குப் பிறகு, அவர் கிப்புட்ஸ் பீரியில் தொடர்ந்து வசித்து வந்தார்.

இந்த நிலையில் இரண்டு நாட்களாக நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் குடும்பத்தினருக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

**வடக்கு - கிழக்கில்...**

குறித்த கலந்துரையாடலில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் முன்னாள் தவிசாளர் நிரோஷ் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் நாளாந்தம் பாடசாலை செல்வது கட்டாயம்

## - கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

அனைத்து தரங்களிலும் உள்ள மாணவர்கள் நாளாந்தம் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டியது கட்டாயமானது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி – அயகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் நாளாந்த பாடசாலை வருகை வீழ்ச்சியடையுமாயின், எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் பரீட்சைகளில் அவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த வருடம் ஜனவரி மாதம், கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்திலும் ஆரம்பப் பிரிவுகளுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம் என்றும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி பலி



காலியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி உயிரிழந்துள்ளார்.

உந்துருளியில் பிரவேசித்தவர்கள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணம் – பருத்தித்துறை – அல்வாய் பகுதியில் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வாள்வெட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபரை கைது செய்ய முற்பட்ட போது, சந்தேகநபர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போதே பொலிஸாரால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது என பருத்தித்துறை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069

## சே குவேராவின் இறுதிக் கணங்கள்:

# எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்து!

ஒரு மாவீரனின் இறுதி மூச்சுக்கான வரலாறு எழுதப்பட தயாராகி கொண்டிருக்கின்றது என்பதை எவருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை.

**மக்களின் விடிவிற்காக:**

இலத்தீன் அமெரிக்க மக்களின் விடிவிற்காக ஒரு புரட்சி வீரனின் இறுதிக்கணங்கள் இங்கே தான் எழுதப்படப் போகிறது என்பதை யாருமே அறியவில்லை.

1966ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னர் மார்ச் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, அர்ஜெண்டைனா, பொலிவியா நாடுகளில் பயணம் செய்தார் அந்த புரட்சியின் ஒளிர்முகம்.

1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு பொலிவியா நாட்டுக்குள் நுழைந்த அந்த மாவீரன் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது . அத்துடன் பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது .

பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்துவிடலாம் என்றே அவர் நினைத்தார்.

**பொலிவியாவில் புரட்சி :**

எதற்காக பொலிவியா நாட்டைத் தேர்ந் தெடுத்தார் என்றால், அமெரிக்கா பொலி வியாவைவிட கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒரு காரணமாகும்.

பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின் போது பொலிவியக் காடுகளில் நீண்ட காலமாக மக்களோடு மக்களாக பதுங்கி இருந்து மக்களுக்காக மரணத்தை மகிழ்வோடு ஏற்ற மாவீரனே 'சே குவாரா' !

மிகுந்த மனவேதனையுடன் ஆஸ்துமாவும் சேர்ந்து 'சே'யை வாட்டி வதைத்தது. போதிய வீரர்கள் இல்லாதது மற்றும் உணவின்மை போன்ற பிரச்னைகளுடன் 'சே' காடுகளில் அலைந்தார். சேயை தேடித் திரிந்த சி.ஐ.ஏ. ஏற்கனவே பொலிவியாவுக்குள்ளும் புகுந்து விட்டது.

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகின்றார்கள் எனும் சே குவேராவின் கூற்றுக்கிணங்க மக்களின் நலனுக்காக தன்னையே தியாகித்த வீரன் தான் சே குவாரா.

இப்பூமிப் பந்தில் பலர் உதிக்குன்றனர், பலர் மறைகின்றனர். ஆயினும் ஒருசிலரே இன்றுவரை நீடித்து நிலைத்து சாதனை படைக்கிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்ட பெயரில் ஒன்றே சே குவேரா.

**மருத்துவ பட்டதாரி :**

1928 ஜூன் 14இல் ஆர்ஜென்டீனா, ரொசாரியோவின் செல்வந்த குடும்பத்தில் பிறந்து,ஒரு மருத்துவராக பட்டம் பெற்ற இவர் நினைத்திருந்தால் தன் காலம் முழுவதும் வசதியான வாழ்க்கையை மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனால் அனைத்தையும் துறந்து ஒடுக்கப் பட்ட மக்களுக்காக அதுவும் வேறு நாட்டு மக்களுக்காக போராடிய இவரது போராட்டம் அளப்பரிய ஒன்றாகும்.

பூமியின் நடுவினில் ஆழப்பதிந்த பெயர் பெற்ற சேகுவாரா தனது இறுதிக்கணங்கள் கூட ஒரு பரட்சி வீரனின் உன்னத தியாகத்தை உலகறியச் செயத்து.

**'சே'யின் இறுதிக் கணங்கள் :**

1967 அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம்.

காலை 10.30 யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் 'சே' கடந்து செல்கிறார். வழியில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண்ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக்களை பரிசாகத் தருகிறார்.

நண்பகல் 1.30 அந்தக் குண்டுப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு 'சே'வின் இருப் பிடத்தைக் காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும் துப்பாக்கியால் சுடுகின்றனர்.

பிற்பகல் 3.30 காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கியுடன் சூழ்ந்த பொலிவிய ராணுவத்திடம், "நான்தான் 'சே'. நான்இறப்பதைக் காட்டிலும், உயிருடன் பிடிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்" என்கிறார்.

காலில் குண்டு அடிபட்ட நிலையில் சே குவேரா மாலை 5.30அருகிலிருந்தலா ஹிகு வேராவுக்கு வீரர்கள் கைத்தாங்கலாக சே'வை அழைத்து வருகின்றனர்.

அங்கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் 'சே' கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறைவைக்கப்படுகிறார்.

இரவு 7.00 'சே பிடிபட்டார்' என சி.ஐ.ஏவுக்குத் தகவல் பறக்கிறது.. அதே சமயம், 'சே' உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டதாகப் பொய்யான தகவல் பொலிவிய ராணுவத்தால் பரப்பப்படுகிறது.

தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், "இது என்ன இடம்?" என்று 'சே' கேட்கிறார். பள்ளிக்கூடம் என அந்தப் பெண் கூற, "பள்ளிக்கூடமா ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?" என வருத்தப்படுகிறார். சாவின் விளிம்பிலும் 'சே'வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறார்.

அக்டோபர் 9 அதிகாலை 6.00 லாஹிகு வேராவின் பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு ஹெலிகாப்டர் வட்டமடித்தபடி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்திவாய்ந்த ரேடியோ மற்றும் கேமராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட்ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார்.

பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன. தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.



கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால்கள் கட்டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் 'சே'வைப் பார்த்ததும், அவருக்கு அதிர்ச்சி.

**அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமான மாவீரன் :**

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந்தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது என அவருக்கு வியப்பும் திகைப்பும்! பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக் கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன.

தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

காலை 10.00 'சே'வை உயிருடன் வைத்துக் கொண்டு விசாரணை நடத்தினால், அது உலகம் முழுக்க அவர் மேல் பரிதாபத்தையும், நாயகத் தன்மையையும் உருவாக்கிவிடும் என்பதால், அவரை உடனடியாகத் தீர்த்துக்கட்டி விடுவதுதான் சரி என சி.ஐ.ஏவிடம் இருந்து தகவல் வருகிறது.

காலை 11.00 'சே'வைச் சுட்டுக் கொல்வது என முடிவெடுக்கப்படுகிறது. யார் அதைச் செய்வது எனக் கேள்வி வருகிறது. 'மரியோ ஜேமி' என்னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அக்காரியத்துக்காகப் பணியமர்த்தப்படுகிறார்.

மரியோ ஜேமி' கைகள் கட்டப்பட்ட நிலையில், 'சே'வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத் துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். "முட்டி போட்டு உயிர் வாழ்வதைவிட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!" என்பார் 'சே'. ஆனால், மரியோ அவரை ஒரு கோழையைப் போலக் கொல்லத் தயாராகிறார்.

**வீரனாய் வீழ்ந்த சே :**

தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை அலட்சியப்படுத்துகிறார். "கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!" இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!

மணி 1.10 மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி குண்டுகள் பாய்கின்றது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடை பெறுகிறான்.

சேவின் மார்புகளைத் தோட்டாக்களால் துளைத்தது. ஆனால் அந்த வீரனின் கண் இமைகள் அப்போதுகூட மூடிக்கொள்ளவில்லை. கண்கள் திறந்தபடியேதான் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.

எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிற்காகவோ போராடி எந்த மண்ணிலோ துணிச்சலாக மரணத்தை சந்தித்த சே குவேரா இந்த யுகத்தின் ஒப்பற்ற தலைசிறந்த விடுதலைப்போராளி. எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்தான சே குவேரா, எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகமானார்.

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

# அக்கரைப்பற்று மருது விளையாட்டு கழகத்தினரால் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

அக்கரைப்பற்று மருது விளையாட்டு கழகத்தினரால் ஆலையடிவேம்பு கல்விக்கோட்ட தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் இலவச கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மருது விளையாட்டு கழகத்தின் நிர்வாக தலைவர் திலீபன் மற்றும் அணித்தலைவர் கிறிஸ்டி தலைமையில் இடம்பெற்றது.



குறித்த இலவச கருத்தரங்குக்கு மருது விளையாட்டு கழகத்தின் செயலாளர் வினோஜன், பொருளாளர் சிறிதரன் மற்றும் புலமைப் பரிசில் கருத்தரங்கு ஏற்பாட்டாளர் கமு/திகோ/கோளாவில் விநாயகர் வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் உமாகாந்தனின் வழிகாட்டலிலும், சமூக பற்றாளர்களின் நிதிப் பங்களிப்புடனும் கழக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும் 400 மாணவர்களுக்கு இந்த இலவச கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கு ஆலையடிவேம்பு கோட்டத்தை பிரதிபலிக்கும் 11 பாடசாலைகள் 04 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஆசிரியர்களான வே. கிருஷாந்தன், சீ. பிரபாகரன், த. முரளீஸ்பரன் மற்றும் ப. விஜயேந்திரன் ஆகியோரின் வழிகாட்டலில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினால் பசு வழங்கல் வேலைத்திட்டம்



கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையால் ஆலயத்திற்கு நேர்த்திக்கடனாக கிடைக்கப்பெற்ற பசுக்களை வறுமையான குடும்பங்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மிகவும் வறுமையான குடும்பத்திற்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஒரு பசு வழங்கல் வேலைத்திட்டம் முதற்கட்டமாக இடம்பெற்றுள்ளது.

போரதீவுப்பற்று பிரதேச செயலகம் வெல்லாவெளி, மண்முனை மேற்கு பிரதேச செயலகம் வவுணதீவு, ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகம் செங்கலடி ஆகியவற்றில் இருந்து பிரதேச செயலாளர் ஊடாக தெரிவு செய்யப்பட்ட தலா இரண்டு பயனாளிகளுக்கு பசுக்கள் வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமுன்றலில் இடம்பெற்றுள்ளது.

ஆலய பரிபாலன சபை தலைவர் இ. மேக ராசா தலைமையில் கடந்த சனிக் கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இதன்போது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக் குருக்கள், செயலாளர் சி.கங்காதரன், பொருளாளர் ச.கோகுலகிருஸ்னன் தேசமகா சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வார இதழ்
தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM ජාතිකම
தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!
தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME
No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557 | Whatsapp : +94 76 567 3339 | E-mail : thesiyamnews@gmail.com


அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...
கிருபா லேணர்ஸ்
කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS
அ.கிருபாகரன்
- அதிபர் -
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறையில் கட்டணங்கள்.
இரவிலும் வாகனப் பயிற்சிகள்.
We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777
STOP
50
130